
தமிழரசு
அலுவலகப் பிரதி



# உலகத் தமிழ்ச் செம்மொழி மாநா

– ஒரு கண்ணோட்

தமிழரசு
அலுவலகப் பிரதி

அலுவலகப் பிரதி

# உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு

## – ஒரு கண்ணோட்டம்

**கலைஞர் மு. கருணாநிதி**
தமிழ்நாடு முதலமைச்சர்

எங்களது அறிவார்ந்த தலைவர் அறிஞர் அண்ணா அவர்கள் தமிழ்நாடு முதலமைச்சராகப் பதவி வகித்த போது, 1968ஆம் ஆண்டு சென்னையில் இரண்டாவது உலகத் தமிழ் மாநாட்டை மிகப் பிரம்மாண்டமான அளவில், நாடு, உலகம் முழுவதிலுமிருந்து திரண்டு வந்த இலட்சக்கணக்கான தமிழர்களின் பங்கேற்புடன் நடத்தினார். 1966ஆம் ஆண்டு கோலாலம்பூரில் நடைபெற்ற முதல் உலகத் தமிழ் மாநாடு, பாரிஸ் மாநகரில் மூன்றாவது மாநாடு (1970), யாழ்ப்பாணத்தில் நான்காவது மாநாடு (1974), மதுரையில் ஐந்தாவது மாநாடு (1981), கோலாலம்பூரில் ஆறாவது மாநாடு (1987), மொரிசியஸ் நாட்டில் ஏழாவது மாநாடு (1989), தஞ்சையில் எட்டாவது மாநாடு (1995) ஆகியவற்றை இரண்டாவது மாநாட்டுடன் ஒப்பிட்டால் அவை சாதாரண அளவில் அமைந்தவையாகும்.

தமிழ்மொழியின் மேம்பாட்டிலும், அதன் பெருமையையும், கவுரவத்தையும் மீட்டெடுப்பதிலும்

மாபெரும் சாதனையாக, தமிழ் மொழியைச் செம்மொழி என்று மத்தியில் ஆளும் ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு அறிவித்து, அறிவிக்கை செய்வதில் நாம் கண்ட வெற்றி, சென்னையில் செம்மொழித் தமிழ் ஆய்வு மத்திய நிறுவனத்தை அமைப்பதில் நாம் வெற்றி பெற்றது, நாடு மற்றும் சர்வதேச அளவில் புகழ் பெற்ற தமிழ் அறிஞர்களுக்கு இந்தியக் குடியரசுத் தலைவரின் 'குறள்பீட விருது', 'தொல்காப்பியர் விருது' ஆகியவற்றை வழங்க வழிவகுத்தது – ஆகியவற்றை அடுத்து முதல் உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டை நடத்துவது பொருத்தமாக இருக்கும் என்று கருதினோம். கோவை மாநகரில் மிகச் சிறப்பான முறையில் 2010ஆம் ஆண்டு ஜூன் மாதம் 23ஆம் நாள் முதல் 27ஆம் நாள் வரையில் ஐந்து நாட்களுக்கு அம்மாநாட்டை நடத்துவது என்று முடிவு செய்தோம்.

**செம்மொழிக்கான கோரிக்கை**

150 ஆண்டுகளுக்கும் மேலாக, தமிழ் அறிஞர்களும், தமிழ்ப் பாரம்பரியம் பற்றிய உணர்வு உள்ளவர்களும் தமிழ் மொழியின் செம்மொழித் தன்மையை அங்கீகரிக்க வேண்டும் என்று கோரி வந்துள்ளனர்; தமிழ் மொழிக்கு வளமான, தொன்மையான இலக்கிய, இலக்கணப் பாரம்பரியங்கள், சொந்தமான எழுத்து வடிவம், இடைவிடாத நீண்டகால வரலாறு ஆகியவை உள்ளன என்று எடுத்துக் காட்டினர்; மேலும், தமிழ்நாட்டில் குறைந்தபட்சம் 2000 ஆண்டுகளுக்கும் மேலாகப் பேசும் மொழியாகத் தமிழ் தொடர்ந்து இருந்து வருகிறது என்பதையும் சுட்டிக்காட்டினர். தமிழ் செயல்முறையிலான நவீன

மொழியாக இருந்த போதிலும், அதன் பழமையான தன்மை சீர்குலையாமல் பேணி வளர்க்கப்படுகிறது.

பிரிட்டிஷ் இந்திய நிருவாகம் சமஸ்கிருதம், பாரசீகம், அரேபிய மொழிகளைச் செம்மொழிகளாகப் பாவித்து, அம்மொழிகளைக் கற்கவும், மேம்படுத்தவும் சிறப்புச் சலுகைகளையும், ஆதரவு அமைப்புகளையும் உருவாக்கிய பின்னணியில், தமிழுக்குச் செம்மொழித் தகுதி அளிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை எழுந்தது. மேலும், பல்வேறு மொழியியல், இலக்கிய, சமய, மானிடவியல், சமூகவியல், பண்பாடு மற்றும் கட்டடவியல் பொருட்கள் மற்றும் படைப்புகள் மூலமாக, தற்போதுகூட எளிதில் காணப்படக்கூடிய வலுவான தமிழ்ப் பாரம்பரியம், முனைப்பு ஆகிய நிலையிலும் இந்தக் கோரிக்கை எழுந்தது.

அண்மைக் காலத்தில், அமெரிக்காவின் பெரிக்கெலியிலுள்ள கலிபோர்னியா பல்கலைக்கழகத்தில் தமிழ்த் துறைப் பேராசிரியர் ஜார்ஜ் ஹார்ட் மிகத் தெளிவான வாதங்களுடன் தமிழ் மொழி செம்மொழியாக அங்கீகரிக்கப்பட்டு, அறிவிக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தினார்.

2000ஆம் ஆண்டில் அவர் எழுதியதாவது; “முதலில், தமிழ் மொழிக்குக் கணிசமான பழமை உண்டு, இரண்டாவதாக, தோன்றி விரிந்த தமிழ் மொழிக்கு மட்டுமே சமஸ்கிருதத்திலிருந்து பெறப்படாத, இந்தியாவில் தோன்றி வளர்ந்த இலக்கியப் பாரம்பரியம் உண்டு. மூன்றாவதாக, செம்மொழித் தமிழ் இலக்கியங்களின் தரம், சமஸ்கிருதம்,

கிரேக்கம், லத்தீன், சீனம், பாரசீகம், அரேபியம் ஆகிய மொழிகளிலுள்ள மாபெரும் இலக்கியங்களுக்கு ஒப்ப நிற்க முடியும்''.

திராவிட மொழிக் குடும்பத்தின் உண்மை நிலை, தமிழ் மொழியின் மிகப்பழமை ஆகியவற்றை எந்தவிதமான சர்ச்சைகளுக்கும் அப்பால் டாக்டர் ராபர்ட் கால்டுவெல் **(1814 – 1891)** நிலைநாட்டினார். அனைத்துத் திராவிட மரபு வழக்கத் தொடர்களிலும் தமிழுக்கு மிகவும் உயர்ந்த செழுமை உண்டு என்றும், சமஸ்கிருதத்தைத் தேவைப்படின் முற்றிலுமாக நிராகரித்து விட்டுத் தனித்துவத்துடன் திகழ முடியும் என்பதோடு அதன் துணையின்றிச் செழித்தோங்கவும் முடியும் என்றும் அவர் கூறினார்.

கால்டுவெல்லின் ஆய்வு பின்னர் சென்னை கிறித்துவக் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராகப் பணியாற்றிய பரிதிமாற் கலைஞர் (வி.ஜி.சூரிய நாராயண சாஸ்திரி) என்ற மாபெரும் தமிழ் அறிஞர் நிறுவிய தனித்தமிழ் இயக்கத்திற்கு அடித்தளம் அமைத்தது. தமிழைச் செம்மொழியாக அங்கீகரிக்க வேண்டும் என்ற அறைகூவலை முதலில் விடுத்தவர் அவர். அவருடைய கருத்துக்குப் பிரபல அறிஞர்களான மறைமலை அடிகள் **(1876 – 1950)**, தேவநேயப் பாவாணர் ஆகியோர் மேலும் செழிப்பூட்டினர். உலகின் ஆதார செம்மொழி தமிழ் என்றும் அவர்கள் கருதினர்.

**1918** ஆம் ஆண்டு, சென்னைப் பல்கலைக்கழகம் தமிழுக்குச் செம்மொழித் தகுதி அளிக்க வேண்டும் என்ற தீர்மானத்தை சைவ சித்தாந்த சமாஜம் நிறைவேற்றியது.

சென்னைக் கிறித்தவக் கல்லூரியில் பேராசிரியராகப் பணிபுரிந்தவரும், தனித் தமிழ் இயக்கத்தை முன்னெடுத்துச் சென்றவருமான மறைமலை அடிகளின் (இவரது இயற்பெயர் வேதாசலம்) முன் முயற்சியால் இத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இரண்டு ஆண்டுகளுக்குப் பின்னர், தஞ்சையிலிருந்து கரந்தை தமிழ் சங்கம் இந்தத் தகுதிப் பிரச்சினையை மாகாண அரசிடம் எழுப்பும்படி பல்கலைக் கழகத்திடம் மனு அளித்தது. அதன்பிறகு, நீண்ட காலமாக இக்கோரிக்கை பற்றி எதுவும் கேட்கப்படவில்லை.

1970ஆம் ஆண்டுகளில், அப்போது 'யுனெஸ்கோ கூரியர்' (தமிழ்) இதழின் ஆசிரியராகப் பணியாற்றிய மணவை முஸ்தபா இந்த இலட்சியத்துக்காகப் பாடுபட்டார். ஆனால், அவருக்கு அமைப்பு ரீதியிலான பின்னணி ஆதரவு கிடைக்கவில்லை. 1975ஆம் ஆண்டு முதல் அவர் இக்கோரிக்கையை வலியுறுத்திச் செய்தி ஏடுகளிலும், இதழ்களிலும் தொடர்ந்து எழுதி வந்தார். அப்போது முதலமைச்சராக இருந்த எம்.ஜி.ஆர். செம்மொழித் தகுதியைப் பெற தமிழுக்கு எவ்வாறு தகுதி உள்ளது என்று விளக்கி மனு ஒன்றை அனுப்பும்படி அவரைக் கேட்டுக் கொண்டார்.

அந்த அடிப்படையில், செம்மொழித் தகுதி பெற ஒரு மொழிக்கு இருக்க வேண்டிய அம்சங்கள் உட்பட தேவையான விவரங்களைச் சேகரிக்கத் தனக்கு இரண்டு ஆண்டுகள் ஆயின என்று முஸ்தபா கூறினார். 1982ஆம் ஆண்டு அவர் முதலமைச்சரிடம் ஒரு மனுவை அளித்தார். ஆனால், எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. தமிழுக்குத் தற்போது பேச்சு வழக்கில் இல்லாத லத்தீன்,

கிரேக்கம், சமஸ்கிருதம் போன்றவற்றிற்கு நிகரான தகுதி வழங்கினால், தமிழும் ஒரு 'இறந்த மொழியாகக்' கருதப்பட்டு விடும் என்ற அடிப்படையில் ஒரு அரசு உயர் அதிகாரி அம்மனுவை நிராகரித்துவிட்டார் என்று அவர் அறிந்ததாகச் சில ஆண்டுகளுக்குப் பின்னர் மணவை முஸ்தபா தெரிவித்தார்.

**இயக்கம் தீவிரமடைந்தது**

ஏறத்தாழ பத்து ஆண்டுகளுக்கு முன்பு பெரும் அரசியல் கட்சிகள் இப்பிரச்சினையை எடுத்தபிறகு, தமிழைச் செம்மொழியாக வகைப்படுத்த வேண்டும் என்பதற்கான இயக்கம் தீவிரமடைந்தது. 1996ஆம் ஆண்டு பொதுத் தேர்தலுக்கு சில மாதங்கள் முன்னர் தி.மு.க. அதன் திருச்சி மாநாட்டில், தமிழ் மொழியை மத்திய அரசின் அதிகாரபூர்வமான மொழிகளில் ஒன்றாக அறிவிக்க வேண்டும் என்ற தீர்மானத்தை நிறைவேற்றியது. நாடாளுமன்றப் பொதுத் தேர்தலுடன் நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலுக்கான தி.மு.க.வின் தேர்தல் அறிக்கையிலும் இக்கோரிக்கை சேர்க்கப்பட்டது.

1998ஆம் ஆண்டு மத்தியில் பாரதிய ஜனதா கட்சி ஆட்சியைக் கைப்பற்றியபோது, 1999ஆம் ஆண்டை சமஸ்கிருத ஆண்டாக அறிவித்து பல்கலைக்கழகங்களுக்கும், சமஸ்கிருத அமைப்புகளுக்கும் பெருமளவில் நிதி வழங்கிய பா.ஜ.க. தலைமையிலான அரசு, தமிழ் மொழிக்கு செம்மொழித் தகுதி வழங்குவதில் ஆர்வம் காட்டவில்லை என்று பல கல்வியாளர்கள் கருதினர். பின்னர்

அந்த அரசில் அங்கம் வகித்த தி.மு.க. தமிழுக்காக வாதாடி வலியுறுத்தியது. உண்ணாவிரதங்களையும், ஆர்ப்பாட்டங் களையும் நடத்தி ஆயிரக்கணக்கானோர் கைதாகினர்.

விழுப்புரத்தில் நடைபெற்ற தி.மு.க. மாநாட்டிலும் இதற்காக ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. 2004ஆம் ஆண்டு மக்களவைத் தேர்தலுக்கான தி.மு.க. தேர்தல் அறிக்கையில், “தமிழ் ஆராய்ச்சிக்கென மத்திய அரசு நிதி ஒதுக்கீடு செய்ய வழி வகுக்கும் என்பதாலும், இந்தியாவிலும் வெளி நாடுகளிலும் உள்ள பல்வேறு பல்கலைக்கழகங்களில் தமிழ் ஆராய்ச்சிக்கு உதவும் என்பதாலும் தமிழைச் செம்மொழி என்று அறிவிக்க தி.மு.க. தொடர்ந்து வலியுறுத்தும்” என்று கூறப்பட்டிருந்தது.

தி.மு.க. தலைமையிலான கூட்டணி தேர்தலில் பெருவெற்றி பெற்று மத்தியில் அமைந்த ஐக்கிய முன்னணி அரசில் தி.மு.க. முக்கியமானதொரு அங்கம் ஆயிற்று; அதன் பயனாக அரசின் குறைந்தபட்ச செயல் திட்டத்தில் இக்கோரிக்கையைச் சேர்க்க நம்மால் முடிந்தது. 2004 ஜூன் மாதம் நடைபெற்ற முதல் நாடாளுமன்ற கூட்டத் தொடரிலேயே அன்றைய குடியரசுத் தலைவரும், தமிழ் அறிஞருமான ஏ.பி.ஜெ.அப்துல் கலாம் அவர்கள் தமிழ் மொழியைச் செம்மொழியாக அறிவித்தது வெறும் அடையாளப் பூர்வமானது மட்டுமல்ல; அது இந்திய ஜனநாயகத்துக்கும், கூட்டாட்சி அரசியலுக்கும் கிடைத்த வெற்றியும் ஆகும்.

2004ஆம் ஆண்டு செப்டம்பர் 17 அன்று செய்தி மற்றும் ஒலிபரப்பு அமைச்சர் திரு. எஸ்.ஜெய்பால் ரெட்டி, செம்மொழித்

தகுதி வழங்கும் அரசின் முடிவு, 'செம்மொழிகள்' என்றதொரு வகையை உருவாக்க சாகித்ய அகாடெமியின் வல்லுநர் குழு செய்த பரிந்துரையின் அடிப்படையில் எடுக்கப்பட்டது என்று அறிவித்தார். அக்குழு உருவாக்கிய தகுதிகளை தமிழ் பெற்றிருந்ததால், அது இந்த கவுரவம் மிக்கத் தகுதியைப் பெறும் முதல் மொழி என்ற சிறப்பை வென்றது. தமிழ் மொழியும் கிரேக்கம், லத்தீன், சமஸ்கிருதம் போன்ற இதர சில மொழிகளும் அவற்றின் தொன்மை மற்றும் வளமான இலக்கியப் பாரம்பரியம் ஆகியவற்றின் காரணமாக செம்மொழிகள் என்ற தகுதியைப் பெற்றிருந்தாலும், தமிழ் மொழிதான் செம்மொழி என்ற அதிகாரபூர்வ தகுதி அளிக்கப்பட்ட, உயிர்ப்புடன் வழக்கில் இருக்கும் முதல் மொழியாகும்.

2004, அக்டோபர் 24 அன்று, ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு தமிழ் மொழியைச் செம்மொழி என்று அறிவிக்கும் அறிவிக்கையை வெளியிட்டது. இவ்வாறு சுதந்திர இந்திய அரசினால் அறிவிக்கப்பட்ட முதல் செம்மொழி என்ற தனிச்சிறப்பை தமிழ்மொழி பெற்றது.

அதன் காரணமாக 2006 மார்ச் 5 அன்று திருச்சியில் நடைபெற்ற தி.மு.க. மாநாட்டில், காங்கிரஸ் கட்சியின் தலைவர் திருமதி சோனியா காந்தி அவர்களின் முன்னிலையில் நான் எனது மட்டற்ற மகிழ்ச்சியை வெளிப்படுத்தினேன். இந்த முடிவு குறித்து அவர் எனக்கு எழுதிய கடிதம் வெறும் கடிதமல்ல என்றும், மாறாக, காலத்தால் அழிக்க முடியாத செப்பேடு என்றும் நான்

கூறினேன். 2005 நவம்பர் 8 அன்று அவர் எழுதிய அக்கடிதத்தில்,

"அன்பான திரு.கருணாநிதிஜி அவர்களே, உங்களது அக்டோபர் 28ஆம் தேதியிட்ட கடிதம் கிடைக்கப் பெற்றேன். தமிழ் மொழியைச் செம்மொழியாக அறிவிக்க பூர்வாங்க நடவடிக்கைகள் தற்போது நிறைவுற்றுள்ளன என்பதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன். இது ஐக்கிய முற்போக்கு கூட்டணியில் அங்கம் வகிக்கும் அனைத்துக் கட்சிகளுக்கும் சாதனை என்றாலும் கூட, உங்களுக்கும் உங்களது கட்சிக்கும் குறிப்பாக பெருமையாகும்.

உண்மையுள்ள,
சோனியா காந்தி"

– என்று எழுதியுள்ளார்.

தமிழர்களின் நூறாண்டு கனவு நனவாகி செம்மொழி வரலாற்றின் முதல் பகுதி நிறைவுற்றது. தமிழ் மொழிக்கு செம்மொழித் தகுதி கோரிக்கையின் வரலாற்று வளர்ச்சிப் போக்கையும், அதற்காகப் பங்களித்த அறிஞர்கள், பெருமக்கள் பற்றியும் விளக்கி எங்களது கட்சி நாளேடு 'முரசொலி'யில் 'செம்மொழி வரலாற்றில் சில செப்பேடுகள்' என்ற தலைப்பில் நான் எனது உடன்பிறப்புகளுக்குத் தொடர்ந்து கடிதங்கள் எழுதினேன்.

## மாநாட்டு இலச்சினையின் முக்கியத்துவம்

கோவையில் 2010, ஜூன் திங்கள் 23ஆம் நாள் முதல் 27ஆம் நாள் வரை நடைபெறவுள்ள உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டிற்கான இலச்சினை (LOGO) உருவாக்கப் பட்டுள்ளது. அந்த இலச்சினையை 23.10.2009 அன்று சென்னை தலைமைச் செயலகத்தில் மாண்புமிகு நிதியமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன், மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின், மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு. பரிதி இளம்வழுதி, பேராசிரியர் வா.செ.குழந்தைசாமி, தொல்லியியல் அறிஞர் திரு. ஐராவதம் மகாதேவன், தலைமைச் செயலாளர் திரு. கே.எஸ்.ஸ்ரீபதி, நிதித்துறை முதன்மைச் செயலாளர் திரு. கு. ஞானதேசிகன், உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டின் தனி அலுவலர் திரு. க.அலாவுதீன், தஞ்சை தமிழ்ப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் முனைவர் ம.இராசேந்திரன், தமிழ் வளர்ச்சித்துறை செயலாளர் திரு. ஜி.முத்துசாமி, செய்தித் துறை இயக்குநர் திரு. சி.காமராஜ், செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனப் பொறுப்பு அலுவலர் முனைவர் க.இராமசாமி ஆகியோர் முன்னிலையில் நான் வெளியிட்டேன்.

## அய்யன் திருவள்ளுவர் திருவடிகளில் சுனாமி அலைகள் சுருளும் அழகிய பின்னணி!

தமிழ் மொழி, செம்மொழியாக அறிவிக்கப்பட்ட பின் நடத்தப்பெறும் உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டிற்காக வடிவமைக்கப்பட்டு உருவாக்கப்பட்டிருக்கும் இந்த இலச்சினை பல்வேறு சிறப்புகளைக் கொண்டுள்ளது.

கப பிரதி

கடல்கோள்களை எதிர் கொண்டும், கால வெள்ளத்தைக் கடந்தும் சீரிளமைத் திறத்தோடு தமிழ்மொழி திகழ்கிறது என்பதைக் குறிக்கும் வகையில் சுனாமி அலைகளும், அய்யன் திருவள்ளுவர் திருவடிகளில் சுருளும் அழகிய பின்னணியில் இலச்சினை உருவாக்கப்பட்டுள்ளது. வழக்கமாக, தத்துவ விளக்கங்களுக்கேற்ப மூன்று விரல் முத்திரைகளைக் கொண்டு சிலைகள் வடிவமைக் கப்பட்டிருக்கும். ஆனால், திருவள்ளுவர் சிலையோ அறம், பொருள், இன்பம் எனும் முப்பாலைக் குறிப்பிடும் வகையில் மூன்று விரல்களுடன் அமைக்கப்பட்டுள்ளது.

திருவள்ளுவரைச் சுற்றியுள்ள மேல்வட்டத்தில் உலகத் தொன்மையான நான்கு நாகரிகங்களில் ஒன்றாகக் கருதப்படும் திராவிட நாகரிகமாகிய சிந்துவெளி நாகரிகச் சின்னங்களும், குறியீடுகளும் இடம் பெறுகின்றன.

சிந்துவெளிப் பள்ளத்தாக்கில் செழித்து வளர்ந்த நகர்மய நாகரிகம் ஐயாயிரம் ஆண்டுகளுக்கும் முற்பட்டது. சிந்துநதிக் கரையில் 1,500 ஏக்கர் பரப்பளவில் செழித்தோங்கி 700 ஆண்டுகள் சிறந்து விளங்கியது சிந்துவெளி நாகரிகம். அகழ்வாய்வில் கண்டெடுக்கப்பட்ட சிந்துவெளிச் சின்னங்களுடன் கூடிய குறியீடுகள் – எழுத்துப் பொறிப்புகள், தமிழகத்தின் கொங்கு மண்டலச் சூலூர், விழுப்புரம் அருகில் கீழவாளை, சோழமண்டலத்தில் மயிலாடு துறை, செம்பியம், கண்டியூர் ஆகிய இடங்களிலும் கிடைத்துள்ளன.

படகும், கப்பலும் தமிழர்கள் திரைகடலோடித் திரவியம் தேடிய திறன்மிகு வரலாற்றையும், காளைச் சின்னம்

தமிழர்களின் வேளாண்மைத் தொழில் சிறப்பையும் வெளிப்படுத்துகின்றன.

இலச்சினையில் ஏழு குறியீடுகள்/சின்னங்கள் இடம் பெறுகின்றன. ஏழு என்பது தமிழர்களுக்குரிய கணக்கீட்டு முறையில் சிறப்பான எண்ணாகும். ஏழு நாட்கள், அகப்பொருள் திணைகள் ஏழு, புறப்பொருள் திணைகள் ஏழு. திருக்குறள் 133 அதிகாரங்கள், அறத்துப்பாலில் பாயிரவியல் தவிர 34 அதிகாரங்கள், பொருட்பாலில் 70 அதிகாரங்கள், காமத்துப்பாலில் 25 அதிகாரங்கள், இவற்றின் கூட்டுத் தொகை ஏழு எனும் எடுத்துக்காட்டுகள் ஏழின் சிறப்பை விளக்கிச் சொல்லும். ஏழு என்பது 'எழு' என்பதாகவும் 'எழுபதில்' இடம்பெறும். இலக்கை எட்டுவதற்கு எழுவது / 'எழு' என்பதாகவும் அமைகிறது.

இந்த மாநாட்டின் எடுத்துரைக் குறிப்பாக (Motto) ''பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்'' என்பது அமைந்துள்ளது. ஓலைச்சுவடியில் இடம் பெற்றுள்ள எடுத்துரைக் குறிப்பு, இன்றைய உலகிற்குத் தமிழ்ச் செம்மொழி வழங்கும் கொடையாகக் கருதத்தக்கது.

இன்றைய உலகின் தேவை நல்லிணக்கம்; சாதி, மதம் கடந்து மக்கள் மனநிறைவோடு வாழும் மனிதநேயம் செறிந்த வாழ்க்கை; இதற்குத் தேவை வேறுபாடற்ற உலகம். ஏற்றத்தாழ்வற்ற உலகம் அமைய இந்தியா உலகிற்கு அளிக்கும் கருத்துக் கொடை "பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்" என்பதாகும். இச்சிந்தனை 2000 ஆண்டுகளுக்கும் முன்பே தமிழ்ச் செம்மொழி தரணிக்கு வழங்கிய கொடையாகும்.

செம்மொழி மாநாட்டிற்கான மையப் பாடலை நான் எழுதி, ஆஸ்கார் மற்றும் கிராமி விருதுகளை வென்ற ஏ.ஆர்.ரகுமான் இசை அமைந்துள்ளார். அதன் ஒளிக் குறுந்தகட்டை முன்னணி திரைப்பட இயக்குநர் கவுதம் மேனன் உருவாக்கினார்.

2010 ஜூன் 23 அன்று காலை மேதகு குடியரசுத் தலைவர் திருமதி.பிரதிபா பாட்டீல் அவர்கள் உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டைத் தொடங்கி வைப்பார். எனது தலைமையில் நடைபெறவுள்ள தொடக்க விழாவில், மேதகு தமிழ்நாடு ஆளுநர் திரு.சுர்ஜித் சிங் பர்னாலா, பேராசிரியர் ஜார்ஜ் ஹார்ட், டாக்டர் வா.செ.குழந்தைசாமி, டாக்டர் க.சிவத்தம்பி போன்ற அறிஞர்கள் பங்கேற்பர்.

'கலைஞர் மு.கருணாநிதி செம்மொழித் தமிழ் விருது' உலகப்புகழ் பெற்ற இந்தியவியல் அறிஞர் பின்லாந்து நாட்டைச் சார்ந்த டாக்டர் அஸ்கோ பர்போலா அவர்களுக்கு, சிந்துவெளியின் எழுத்து வடிவம், பழந்தமிழுக்கு நெருக்கமான திராவிட மொழி வடிவம் என்று கூறும் அவரது அரும் படைப்பான "Deciphering the Indus script (1994)"க்காக வழங்கப்படும். இந்த விருதை, நான் வழங்கிய எனது சொந்தப் பணமான ஒரு கோடி ரூபாயில் உருவாக்கப்பட்ட நிதியிலிருந்து மத்திய செம்மொழித் தமிழ் ஆய்வு மத்திய நிறுவனம் வழங்குகிறது.

## ஆய்வு அரங்கங்கள்

இந்த மாநாட்டில் தமிழ்மொழி, இலக்கியம், பண்பாடு போன்ற பல தலைப்புகளில் கல்வியாளர்களும், ஆய்வாளர்களும், ஆய்வுக் கட்டுரைகள் அளிக்கும் ஆய்வு அரங்கங்கள் நடைபெறும். மாநாட்டில் பங்கேற்க இதுவரை 49 நாடுகளிலிருந்து 1,020 பிரதிநிதிகள் பதிவு செய்துள்ளனர். அவர்கள் 55 தலைப்புகளில் பல்வேறு பொருள்கள் குறித்து ஆய்வுக் கட்டுரைகளை அளிப்பார்கள்.

## பொது அரங்கம்

பொதுமக்களுக்குப் பயனளித்து அவர்களையும் ஈர்க்கும் வகையில் பல்வேறு இலக்கிய நிகழ்ச்சிகள் பொது அரங்கில் இடம்பெறும். புகழ்மிகுந்த அறிஞர்கள் பங்கேற்கும் இலக்கியச் சொற்பொழிவுகள், கவியரங்கங்கள், விவாத மேடைகள் போன்ற பல்வேறு வடிவங்களில், செம்மொழித் தமிழில் உரைகளைக் கேட்டு மகிழ பொதுமக்களுக்கு வாய்ப்புகள் கிடைக்கும். பல்லாயிரக்கணக்கான பொதுமக்கள் இந்த நிகழ்ச்சிகளில் பங்கேற்பர் என்று எதிர்பார்க்கிறோம். மேலும், இசை, நாட்டியம் போன்ற நிகழ்ச்சிகள் மாலை வேளைகளில் நடைபெற்றுப் பிரதிநிதிகளுக்கும், பொது மக்களுக்கும் தமிழ்ப் பண்பாட்டை வெளிப்படுத்தும்.

## செம்மொழிக் கண்காட்சி

உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டுக்காக அரியதொரு கண்காட்சி ஏற்பாடு செய்யப்படுகிறது. தமிழ்க் கலைகள், பண்பாடு, மொழி, இலக்கியம், தமிழ் வரலாறு

போன்றவற்றைச் சித்திரிக்கும் காட்சிகள் இக்கண்காட்சியில் இடம்பெறும். சிந்து சமவெளியில் தோண்டி எடுக்கப்பட்ட தொன்மையான பொருட்கள், சோழர்கள் மற்றும் பல்வேறு காலங்களைச் சார்ந்த செப்பேடுகள், கல்வெட்டுகள், சிலைகள் போன்றவையும் இடம் பெறும்.

**அலங்கார ஊர்தி ஊர்வலம்**

மாநாட்டுத் தொடக்க நாளான சூன் 23 அன்று, அலங்கார ஊர்திகள் இடம்பெறும் மிகப் பெரிய ஊர்வலம் நடைபெறும். கோவை மாநகரின் இதயப் பகுதியான வ.உ.சி. பூங்காவிலிருந்து கொடிசியா மைதானம் வரை ஒன்பது கிலோ மீட்டர் தூரத்தை ஊர்வலம் கடக்கும்; அலங்கார ஊர்திகள் பண்டைய சங்க நூல்களிலிருந்து அரிய காட்சிகள் மற்றும் தமிழ் மக்கள் அவர்களது பண்பாடு ஆகியவற்றின் வளத்தைக் காட்டும் வகையில் இடம் பெறும். மேலும் இந்த ஊர்வலத்தில் 2,000 கலைஞர்கள் கொண்ட 40 கலை, கலாச்சார அணிகளும் பங்கேற்கும்.

**தமிழ் இணைய மாநாடு**

முதல் உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டுடன் இணைந்து நடத்த தமிழ்நாடு அரசு முடிவு செய்துள்ள தமிழ் இணைய மாநாடு 2010, மற்றொரு தனித் தன்மை பொருந்திய அம்சமாகும்.

இந்த மாநாட்டின் குறிக்கோள்களாக, தற்காலம் வரை தமிழ் இணைய வலையில் வளர்ச்சியைக் காட்டுதல், இணைய வலையில் தமிழ் மொழியின் பயன்பாட்டை

அதிகரிக்க எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகளைக் கண்டறிதல், தமிழ் இலக்கிய அறிஞர்கள் மற்றும் தமிழ் இணைய வலை மேம்பாட்டாளர்களின் விரிவான இணைப்பை உருவாக்கிடுதல், இணைய வலையில் தமிழ் மொழியைப் பயன்படுத்த இளந்தலைமுறையினரை ஊக்குவித்தல் ஆகியவையாகும்.

தமிழ் இணைய மாநாட்டில் 15 நாடுகளிலிருந்து சுமார் 350 சிறப்பு அழைப்பாளர்கள், பேச்சாளர்கள், பிரதிநிதிகள் மற்றும் நிபுணர்கள் கலந்து கொள்வார்கள் என்று எதிர்பார்க்கிறோம். தமிழ்மொழியை அதன் தேவைக்கு ஏற்பவும், அறிவியல் மற்றும் தொழில்நுட்பம், தகவல் தொழில்நுட்பம், மொழியியல், மானிடவியல், கல்வெட்டியல் மற்றும் இதர அறிவுசார் துறைகளில் துரித வளர்ச்சியைக் கருத்தில் கொண்டும் இந்த மாநாடு 21ஆம் நூற்றாண்டுக்கு எடுத்துச் செல்லும் என்று நான் உறுதியாக நம்புகிறேன்.

---


'தி இந்து' ஆங்கில நாளேட்டின் ஜூன் 3 இதழில் வெளியான சிறப்புக் கட்டுரையின் தமிழாக்கம்.

---

வெளியீடு :

இயக்குநர்,

செய்தி – மக்கள் தொடர்புத்துறை, சென்னை .




சூன் 23–27

THE HINDU